சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:– முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

ELOP : 47/2023

நாள் : 03.03.2026

எ.ம.சா. : 1

பெயர் : முருகராஜ்

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

தமிழகத்தில் நகர் மன்ற, உள்ளாட்சி தேர்தல்கள் 19.02.2022 அன்று நடைபெற்றன என்றால் சரிதான். மயிலாடுதுறை நகராட்சி 9வது வார்டு உறுப்பினர் தேர்தலில் மனுதாரர் மற்றும் ஒன்று முதல் ஆறு எதிர்மனுதார்கள் போட்டியிட்டனர் என்றால் சரிதான். 05.02.2022 அன்று வேட்பு மனுக்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன என்றால் சரிதான். அன்றைய தினம் இரண்டாம் எதிர்மனுதார் மாசிலாமணி என்பவர் முதல் எதிர்மனுதார் லிங்கராஜன் என்பவரின் மனுவை நிராகரிக்கவேண்டுமென்று ஆட்சேபித்து மனு கொடுத்தார் என்றால் அது சரிதான். அதில் முதல் எதிர்மனுதார் மயிலாடுதுறை நகராட்சிக்கு சொந்தமான கடை கட்டிடத்தின் வாடகைதாரராக இருக்கிறார் என்பதால் அவரின் வேட்பு மனுவை நிராகரிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது என்றால் சரிதான். ஒன்றாம் எதிர்மனுதாரர் காவல் நிலைய சாலையில் உள்ள வணிக வளாகத்தில் ஐந்தாம் நம்பர் கடையின் வாடகைதாரராக உள்ளார் என்றால் சரிதான். அந்த விவரத்தை வேட்பு மனுவில்

சொல்லவில்லை என்றால் சரிதான். வேட்பு மனுவை பரிசீலிக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் தேர்தல் நடத்தும் அதிகாரிக்கு உள்ளது என்றால் சரிதான். உதவி தேர்தல் நடத்தும் அதிகாரி தான் வேட்பு மனுவை பரிசீலிக்க வேண்டுமென்றால் சரிதான். அவ்வாறு ஐந்தாம் நம்பர் கடையின் வாடகைதாரராக உள்ளார் என்று பரிசீலிக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த விவரம் பரிசீலிக்கப்பட்டதா சரிபார்க்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. தேர்தல் அதிகாரிக்குதான் தெரியும். அந்த வாடகைக்கு இருந்த விவரத்தை 1ம் எதிர்மனுதாரர் தன்னுடைய வேட்பு மனுவில் சொல்லாமல் மறைத்து விட்டார். எங்களில் ஒரு உதவி தேர்தல் நடத்தும் அதிகாரி இந்த விவரத்தை சரிபார்த்து வருவதற்கு வேட்பு மனு பரிசீலனை முடிந்து வேட்பு மனு ஏற்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இறுதி வேட்பாளர் பட்டியலும் வெளியிடப்பட்டது. வேட்பு மனு தாக்கல் முடிந்து பரிசீலனை செய்து இரண்டு நாட்கள் கழித்து இறுதி வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்பட்டது. கோரிக்கையை ஏற்க இயலாது என்று 05.02.2022 அன்று மாசிலாமணிக்கு நான் உதவி தேர்தல் அதிகாரி என்ற முறையில் கொடுத்த அறிவிப்பு **மசாஆ 8** ஆகும். தமிழ்நாடு நகராட்சி சட்ட விதி 48, 49, 50 களின் படி நகராட்சி சொந்தமான கடை கட்டிடங்களை பொறுத்து ஏதேனும் குத்தகை, வாடகை போன்ற ஒப்பந்தம் செய்திருந்தால் தேர்தலில்

போட்டியிட இயலாது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒன்றாம் எதிர்மனுதாரர் நகராட்சி கடைக்கட்டிடத்தின் கடை எண் ஐந்தின் வாடகைதாரர் என்பதால் அவருக்கு தேர்தலில் போட்டியிட தகுதியில்லை என்றால் சரிதான். அவ்வாறு விவரங்களை மறைத்து தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றாலும் தகுதி நீக்கம் செய்வதற்கு பிரிவு 49ன் கீழ் வழிவகை உள்ளது என்றால் சரிதான். இது தொடர்பாக சுற்றறிக்கைகள், வழிகாட்டு நெறிமுறைகளை மாநில தேர்தல் ஆணையம் வழங்கியுள்ளது என்றால் சரிதான். தினசரி நாளிதழ்களிலும் அறிவிப்பு வெளியாகியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முதல் எதிர்மனுதாரர் தவறான விவரங்களை கொடுத்து வேட்பு மனு தாக்கல் செய்தது தொடர்பாக நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. முதல் எதிர்மனுதாரர் ஆளுங்கட்சியான திமுக சார்பில் போட்டியிட்டார். அவர் ஆளுங்கட்சியை சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக செயல்பட்டோம் என்றால் சரியல்ல. முதல் எதிர்மனுதாரர் தவறான சங்கதிகளை சொல்லியதாலும் அவர் நகராட்சி கடையின் வாடகை தாரர் என்பதாலும் அவர் தகுதிநீக்கம் செய்யகூடியவர் என்பதில் எங்கள் எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். அதேபோன்று மனுதாரரும், கணேசன் என்பவரும் ஆட்சேபணை

தெரிவித்தார்கள் என்றால் சரிதான். மாநில தேர்தல் ஆணையத்திற்கும் புகார் கடிதம் அனுப்பினார்கள் என்றால் சரிதான். இது தொடர்பாக என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை.

**முதல் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

19.02.2022 அன்று நகராட்சி தேர்தல் மயிலாடுதுறையில் நடத்தப்பட்டது என்றால் சரிதான். மனுதாரர் மற்றும் ஒன்று முதல் ஆறு எதிர்மனுதாரர்கள் ஒன்பதாம் வார்டில் போட்டியிட்டார்கள் என்றால் சரிதான். வேட்பு மனுக்கள் கவனமாகத்தான் பரிசீலிக்கப்பட்டது என்றால் சரிதான். உரிய காலத்திற்குள் ஆட்சேபனை தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். காலை 11.00 மணி முதல் மதியம் 3.00 மணிவரை ஆட்சேபணைக்கான காலம் என்றால் சரிதான். 3.20 மணிக்கு தான் 2ம் எதிர்மனுதாரர் மாசிலாமணி ஆட்சேபணை தெரிவித்தார் என்றால் சரிதான். அந்த ஆட்சேபணையில் சரியான முகாந்திரம் இல்லை என்ற அது திருப்பப்பட்டது என்றால் சரிதான். பிறகு தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் மனுக்கொடுக்கப்பட்டு அதுவும் திருப்பப்பட்டது என்றால் சரிதான். ஒன்றாம் எதிர்மனுதாரருக்கு எங்கள் அலுவலகத்தால் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரி எதுவும் நிலுவையில் இல்லை என்றும் தடையின்மை சான்றும்

வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் சட்ட விதிகளுக்கு உட்பட்டு நியாயமான முறையில் தேர்தல் நடந்தது என்றால் சரிதான். முதல் எதிர்மனுதாரர் 650 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார் என்றால் சரிதான். மனுதாரர் ஒரு வாக்கு பெற்றுள்ளார் என்றால் சரிதான். மனுதாரர் எங்கள் அலுவலகத்தில் எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். ஒரு தலைபட்டசமாகவும் தேர்தல் நடத்தப்படவில்லை என்றால் சரிதான்.